**லுனுகல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து லுனுகல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு களஞ்சியத்தில் உள்ள ரூபா 390,000 பெறுமதியான நீர் மீற்றர் தொகை மற்றும் ரூபா 101,700 பெறுமதியான வாகன ரயர் தொகையும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | கடந்த வருடம் வேலை நிறைவுறுத்தப்பட்ட திண்மக் கழிவு முகாமை நிலையம் கட்டுவதற்காக ரூபா 1,996,723 பெறுமதியான வேலைத் தொகை மூலதனமாக்காமையால் நிலையான சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | கடந்த வருடததில் வேலை நிறைவேற்றப்பட்ட சூரிய மின்கல வீதி விளக்குகள் பொருத்தல் ஒப்பந்த வேலைப் பெறுமதி ரூபா 3,922,900 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | தற்போது கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கையை முடிவுறுத்தியுள்ளேன். |
| (iv) | மீளாய்வுர்ஹுடீல் தூீசேும்புா 31 ஆம் திகதிக்கு சூரிய மின்கல கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,922,900 கடன்கொடுநராக கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 64,992,802 பெறுமதியான காணி மற்றும் கட்டட நிலுவைக்கான சான்றிதழ் பெற்ற விலைமதிப்பீட்டாளரின் அறிக்கை, இருப்பு கணிப்பு சபை அறிக்கை, மற்றும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சேவை செய்த உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் செய்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 | மரணமடைந்த, ஓய்வு பெற்ற, தற்போது சேவையில் உள்ள அலுவலர்களிடம் அறவிடவேண்டிய ரூபா 157,925 பெறுமதியான 03 கடன் மீதிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். | அறவிட முடியாதானால் தொடர்புடைய அமைச்சிடம் அனுமதி பெற முன்மொழிவு செய்து சமர்ப்பித்துள்ளோம். |
| (ஆ) | மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 05 வருடத்திற்கு ஒரு தடவை விலை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் சபைக்கு சொந்தமான 33 கடைகளுக்கு சபை விலைமதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வாடகை கொடுத்திருந்த போதிலும் 26 கடைகளுக்கு 2014 ஆம் ஆண்டிற்கு முன் செய்யப்பட்ட விலைமதிபீட்டின் பிரகாரம் வாடகைக்கு வழங்கியிருந்தது. | சுற்றுநிருப அறிவுறுத்தல்ப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் வருடத்தில் விலைமதிப்பீடு செய்ய கடிதம் அனுப்பியுள்ளேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,722,731 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,624,747 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 282,000 | 258,703 | 183,296 | 75,408 | 249,000 | 259,315 | 164,325 | 94,989 |
| (ii) | வாடகைகள் | 5,648,194 | 4,957,266 | 4,255,599 | 701,667 | 4,829,950 | 4,070,842 | 2,701,537 | 1,369,305 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,053,000 | 1,291,890 | 915,976 | 375,914 | 1,945,000 | - | - | - |
| | மொத்தம் | 7,983,194 | 6,507,859 | 5,354,871 | 1,152,989 | 7,023,950 | 4,330,157 | 2,865,862 | 1,464,294 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 3 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட ரூபா 1,718,563 பெறுமதியான நிலுவை கேள்வி கோரப்பட்ட கடை வாடகை வருமானம் மற்றும் 05 வருடத்திற்கு மேலாக காணபபட்ட வருமான கடனாளிகள் ரூபா 17,357,675 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,640,256 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 1,436,236 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிட ஏற்பாடு செய்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் அளவீடு செய்யும் குறிகாட்டிகளை இனங்கண்டுள்ளேன். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட செலுத்த வேண்டிய செலவின கடனாளிகள் ரூபா 611,412 மற்றும் ஒப்பந்த கடனாளிகள் ரூபா 5,144,604 தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கடன்நிலுவை தீர்ப்பனவு செய்யவேண்டும். | சரியான முறையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

**பதவி வெற்றிடம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சபையில் 04 பதவிக்கு 05 ஊழியர்கள் வெற்றிடம் உள்ளன. | தேவையான வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடம் நிரப்புவதற்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு தகவல் வழங்கியுள்ளேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான லுனுகல பஸ்தரிப்பிடத்தில் பயன்பாடற்ற காணியில் 2015 மே மாதத்தில் நிர்மாணம் செய்யப்பட்ட கடைக்கு வாடகை கணிப்பீடு செய்து வாடகை அறவிடுவதற்கு தற்போது வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய கடைவாடகை அறவிடப்பட வேண்டும். | புதுவிலை மதிப்பீட்டுப்படி கடைவாடகை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.5 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 திசெம்பர் 08 ஆந் திகதி ரூபா 390,000 செலவு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட 120 நீர் மீற்றர் பயன்படுத்தப்படாது சபை களஞ்சியத்தில் விளைவற்றிருந்தது. | தேவையின்படி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | மடோல்சிம மற்றும் யாபாம்ம நீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்து நீர் மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் உள்ளக கணக்காய்வு திட்டமிட்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | சுற்றுநிருப அறிவுறுத்தலின் பிரகாரம் கூட்டம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |